4. கவன ஈர்ப்பு.

(1) தென் ஆர்க்காடு மாவட்டத் தலைநகரான கடலூரில் கொசுக்களின் தொல்லை பெருகி வருவது குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

'தென் ஆர்க்காடு மாவட்டத் தலைநகரான கடலூரில் இரவு பகல் எந்நேரத்திலும் மனிதர்களைக் கடிக்கும் பெரிய கொசுக்களின் தொல்லை பெருகி வருவதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகள், அவதிகள் குறித்தும், வரி கொடுப்போர் சங்கத்தின் நேரடி நடவடிக்கை குறித்தும்".

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, விவர அறிக்கை@ அவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, கொசுத் தொல்லை என்பது பரவலாகப் பல இடங்களில் இருந்தாலும், கடலூரில் இருக்கின்ற கொசுத் தொல்லை மிகவும் அதிகமாக இருக்கிறது. அந்தக் கொசுக்களைக் கொண்டுவர வேண்டுமென்று ஆசைப்பட்டேன். ஆனால் கொண்டுவரவில்லை. (சிரிப்பு) பகல் நேரங்களில்கூட கடிக்கின்ற அளவிற்கு பெரிய, விசேஷமான கொசுக்கள் அங்கே உற்பத்தியாகின்றன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் ஏற்கெனவே மேலவையில் பேசும்போது, தென் ஆர்க்காடு மாவட்டத்திலே கடலூரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மூளைக் காய்ச்சல் நோய் பரவி, பல குழந்தைகள் இறந்ததற்கான காரணத்தைப் பற்றி விவாதித்தபோது, கொசுக்கள்தான் மூல காரணமாக இருக்கின்றன என்று சொன்னார்கள். மேலும் 'ஃபைலேரியா' என்று சொல்லக்கூடிய வியாதி இன்னமும் ஒழிக்கப்படாத பகுதியாக அது இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இந்த அறிக்கை ஏனோ தானோ என்ற முறையில், திருப்திகரமான பதிலைக் கொடுக்காத அறிக்கையாக இருக்கிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் பாதாளக் கழிவு நீர்த் திட்டத்தை அமுல்படுத்தினால்தான் ஓரளவிற்கு இந்தத் தொல்லைகளைக் குறைக்க சாத்தியக்கூறுகள் உண்டாகும். ஆகவே, பாதாளக் கழிவு நீர்த் திட்டத்தை அமுல்படுத்த—இன்னமும் அந்தத் திட்டம்

@ 559 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அங்கே ஆரம்பிக்கப்படவில்லை—மக்கள் நல்வாழ்வுத் துறை சம்பந்தப்பட்ட துறையை அணுகி நடவடிக்கை எடுக்கவும், அதற்கு அரசு உதவி செய்யவும் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: கடலூரிலே இப்போது பாதாளக் கழிவு நீர்த் திட்டமில்லை. There is also no pucca and open drainage in Cuddalore. In the areas covered by masonry exits, the drains terminate blindly resulting in stagnation of slush leading to mosquito breeding. Most of the drains have no gradient. கிரேடியன்ட்ஸ கிடையாது. அவைகளைச் சரிப்படுத்த நாலும், சம்பந்தப் பட்ட துறை அமைச்சரவர்களும் சேர்ந்து, அதற்குரிய திட்டங்களைச் செய்துகொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு மன நிறைவு தரும் செய்தியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல அங்கே,

There is one control unit at Cuddalore under the National Malaria Control Project. National Malaria Control என்ற அமைப்பு இருக்கிறது. இவைகளெல்லாம் anti-laval operation larvae-ஐ ஒழிப்பதற்காகத் திட்டங்களை மேற்கொண்டு 19,500 ரூபாய் அதற்காகச் செலவு செய்திருக்கிறோம். அதில் மூன்றில் ஒரு பங்கினை அரசாங்கம் கொடுக்க இருக்கிறது. மூன்றில் இரண்டு பங்கினை உள்ளாட்சித் துறை கொடுக்க இருக்கிறது. இரண்டு இலாக்காக்களும் சேர்ந்து, ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்க இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குப் பதிலாகச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல, உள்ளாட்சித் துறையும், மக்கள் நல்வாழ்வுத் துறையும் இணைந்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் காண்பதற்கான வேகமான, விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே கழிவு நீரை அகற்றும் பணி சிறப்பாக நடைபெறவில்லை. இப்போது இயந்திரங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் மூலமாக கழிவு நீரை அகற்றும் பணி ஒழுங்காக நடைபெறவில்லை. 10 நாட்களுக்கு ஒரு முறை அல்லது 2 வாரங்களுக்கு ஒரு முறை அகற்றுவது என்ற அளவில்கூடச் செயல்படவில்லை. அந்தத் தண்ணீர் கொசுக்களை உற்பத்தி செய்வதற்கான உடனடி காரணமாக இருக்கிறது. எனவே தினந்தோறும் தேங்கியிருக்கும் கழிவுநீரை அகற்ற மக்கள் நல்வாழ்வுத் துறையும், உள்ளாட்சித் துறையும் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

 தென் ஆர்க்காடு மாவட்டத் தலைநகரான கடலூரில் கொசுக்களின் தொல்லை பெருகி வருவது குறித்து.

[1981 மார்ச் 10

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உடனேயே, அதை நான் பார்த்துத் தெரிந்து கொண்டதிலே, நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது மாதிரி, நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டுமென்பதில் ஐயப்பாடு இல்லை, கருத்து வேறுபாடு இல்லை. அவைகளைச் செய்யத் தயாராக இருக்கிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) கன்னியாகுமரி மாவட்ட நீர்த் தேக்க அணைகளில் தண்ணீர் குறைவாக இருப்பதால், கடைவரம்பு நிலங்களிலுள்ள பயிர்கள் தண்ணீரின்றி வாடுவதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"கன்னியாகுமரி மாவட்ட நீர்த்தேக்க அணைகளில் தண்ணீர் குறைவாக இருப்பதால் சானல்களில் தண்ணீர் வராமல் தோவாளைச் சானல், என். பி. சானல் போன்ற சானல்களில் கடைவரம்பு நிலங்களிலுள்ள பயிர்கள் தண்ணீரின்றி வாடுவதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து".

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவையின் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, விவர அறிக்கையில், தென் மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்தால், பேச்சிப் பாறை, பெருஞ்சாணி அணைகளில் 58 சதவிகிதம்தான் தண்ணீர் வந்து சேர்ந்தது, இதனால்தான் இத்தகைய சூழ்நிலை இருக்கிறதென்று சொல்லப் பட்டிருக்கிறது. அதில் கருத்து வேறுபாடில்லை. ஆனால் தோவாளை சேனல், என்.பி. சேனல் போன்ற சானல்களின் கடைவரம்பு நிலங்களிலெல்லாம் கடந்த 2, 3 வருடங்களாக, ஒவ்வொரு ஆண்டும் இரண்டாம் போகத்தில் 10,000 ஏக்கர்களுக்குமேல் பயிர்கள் வாடி அழிந்து வந்திருக்கிறது. இந்த வருடமும் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இந்த நிலையில் பங்கீட்டு முறையில் கொடுக்கும் தண்ணீர் பற்றாமல் இருந்தால், கோதையாறு மின்சார

@ 559–560 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.